# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | | |
|---|---|---|
| **IN THE COURT OF** | | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | | |
| Miscellaneous | } | CC.No. 415/2014 |
| Preliminary register | | |
| Sessions | | |
| | | Prosecution PW 3 |
| Deposition Of Witness for | { | Defense |
| | | Court |
| Name | | திரு. செல்லம் |
| Husband Name / Father's Name | | |
| Village | | |
| Taluk | | |
| Religion | | Muslim/Christian/Hindu |
| Age | | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03rd day of June 2022.

நான் கீழ கோடன்குளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் பார்த்து வருகிறேன். அ.சா.1 மாணிக்கம், அ.சா.2 கிறிஸ்டின் எனது ஊர்காரர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும் என்னுடைய ஊர்காரர்கள். வழக்கு சம்பந்தமாக நான் எதையும் நேரில் பார்க்கவில்லை. வழக்கு பற்றி ஏதுவும் எனக்கு தெரியாது. போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

போலிசார் விசாரணையின்போது கடந்த 02.11.2010 ம் தேதி காலை 07.00 மணியளவில் அ.சா.1 வீட்டின் முன்பாக வைத்து பாதை சம்பந்தமாக உள்ள முன்விரோதத்தில் ஆஜர் எதிரிகள் அ.சா.1 யை கெட்ட வார்த்தையில் பேசியதாகவும், கம்பால் அடித்து காயம் ஏற்டுபத்தியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும், சம்பவத்தை நீங்கள் நேரில்ப பார்த்ததாகவும், போலீசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகள் ஊர்காரர்கள் என்பதாலும் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | | |
|---|---|---|
| **IN THE COURT OF** | | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | } | CC.No. 415/2014 |
| Deposition Of Witness for | { | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | | திரு. கிறிஸ்டியன் |
| Husband Name / Father's Name | | |
| Village | | |
| Taluk | | |
| Religion | | Muslim/Christian/Hindu |
| Age | | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03rd day of June 2022.

நான் கீழ கோடன்குளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் பார்த்து வருகிறேன். அ.சா.1 மாணிக்கம் எனது ஊர்காரர். ஆஜர் எதிரிகளை தெரியும் என்னுடைய ஊர்காரர்கள். வழக்கு சம்பந்தமாக நான் எதையும் நேரில் பார்க்கவில்லை. வழக்கு பற்றி ஏதுவும் எனக்கு தெரியாது. போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

போலிசார் விசாரணையின்போது கடந்த 02.11.2010 ம் தேதி காலை 07.00 மணியளவில் அ.சா.1 வீட்டின் முன்பாக வைத்து பாதை சம்பந்தமாக உள்ள முன்விரோதத்தில் ஆஜர் எதிரிகள் அ.சா.1 யை கெட்ட வார்த்தையில் பேசியதாகவும், கம்பால் அடித்து காயம் ஏற்டுபத்தியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும், சம்பவத்தை நீங்கள் நேரில்ப பார்த்ததாகவும், போலீசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகள் ஊர்காரர்கள் என்பதாலும் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 415/2014 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு. மாணிக்கம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03rd day of June 2022.

நான் கீழ கோடன்குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் பக்கத்து வீட்டுகாரர்கள். கடந்த 12.12.2010 ஆம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் நான் தோட்டத்தில் இருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். நான் வீட்டிற்கு செல்லும் பாதையில் ஆஜர் 1 வது எதிரி செல்லையாா முள்ளை வெட்டி போட்டு வைத்திருந்தார். நான் முள்ளை ஏன் வெட்டி போட்டாய் என்று1 வது எதிரியை கேட்டேன். அதற்கு அவர் தேவடியாமவனே நான் அப்படி தான் போடுவேன் என்று கூறி கையில் வைத்திருந்த கருவேல கம்பால் என் இடது மணிகையில் அடித்தார். பின்னர் 2 வது ஆஜர் எதிரி ஜெயகுமாரி இந்த தேவடியா பயலால் என் குடும்பத்திற்கு கேடாக இருக்கிறது என்று கூறி மண்ணை எடுத்து வாரி அடித்தார். நான் கை வலியால் அழுத போது எனது மச்சான் கிறிஸ்டியன் வந்து சண்டையை விலக்கிவிட்டார். பின்னர் எனது மனைவியின் சகோதரர் பெருமாள் என்னை ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். பின்னர் மருத்துவனையில் நான் சிகிச்சையில் இருந்த போது விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கினார்கள். சம்பவத்தின் போது என்னுடன் என் மனைவி, என்னுடைய பிள்ளைகள் உடனிருந்தார்கள். அதன்பிறகு செல்லம் என்பவர் வந்தார். காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்த பிறகு நான் என்னுடைய மச்சனன் பெருமாள் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றேன். சம்பவஇடத்தில் இருந்து 1 மணி நேரத்தில் மருத்துவமனைக்கு

சென்றுவிட்டேன். சம்பவ நடத்திற்கு அருகில் அரசு மருத்துவனை உள்ளது என்றால் சரிதான். எனது ஊருக்கு அருகில் உள்ள முனைஞ்சிபட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கும் அளவுக்கு எல்லா வசதிகளும் உள்ளது என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு காலை 10.00 மணியளவில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். மருத்துவமனையில் மருத்துவர்கள் என்னை விசாரணை செய்தார்கள். மருத்துவரிடம் நான் 4 நபர்கள் என்னை அடித்தார்கள் என தெரிவித்து உள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தின் போது நான் போட்டிருந்த சட்டையில் ரத்த கறை இருந்தது என்றால் சரிதான். மேற்படி சட்டையை போலிசார் விசாரணையில் போலிசார் கைபற்றினார்களா என்றால் கைபற்றினார்கள் பின்னர், என்னிடமே சட்டையை கொடுத்துவிட்டார்கள். மருத்துவமனைக்கு என்னுடன் என் மச்சனன் பெருமாள் வந்தார். எனக்கு 3 சொந்த வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல 1 வீடு தான் உள்ளது. சம்பவம் நடந்த பிறகு நான் காவல்நிலையம் சென்று பின்னர் தான் மருத்துவமனை சென்றேன் என்றால் சரிதான். காவல்நிலையத்திலும் புகார் மனு கொடுத்தேன் பின்னர் காவலர்கள் அறிவுறுத்தலின் படி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலிசார் விசாரணை செய்தார்கள். எனக்கு எழுத படிக்க தெரியும். போலிசார் மருத்துவமனையில் விசாரணை தான் செய்தார்கள் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட தாள் வெள்ளை தாள் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், சொத்து சம்பந்தமாக எதிரிகள் மீது இருந்த முன்விரோத்தால் பொய்யாக சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>